
ஓவியம் சிற்பி ஜெயராமன்

# புதைக்கப்பட்ட புத்தகங்கள்

-குறிஞ்சி மைந்தன்

கண்கள் விழித்திருந்த போது
வலிகளை நான் உணர்ந்ததாக எனக்கு நினைவு இல்லை.
எமதான விழிப்புகளனைத்தும் என் அறையில்
சிதறிக் கிடந்த புத்தகங்களின் மீதே இருந்து வந்தது.
அதனால் எனது கண்களுக்கு புத்தகங்களே எல்லாமாகவும் ஆகிவிட்டன.
என்னைப் பெற்றவர்களே என் முன் வந்து அன்பை பொழிந்தாலும்,
அவர்கள் யாரென்று கூட நான் கேட்க ஆயத்தமாக இருப்பேன்.
இதுதான் எனது முகவரி என்று நீங்கள் நினைத்து கொண்டிருக்கும் வேளையில்
நான் வேறொரு முகவரிக்குள் சிக்குபவனாகவும் இருந்து விடுவேன்.

அன்பு என்றால் என் மொழியில் புணருபவன் என்று அர்த்தப்பட்டுப் போகிறது.
இதை யார் கற்பித்தார்கள் என்றுகூட எனக்கு நினைவு இல்லை.
புணரப்பட்ட அன்பை அல்லது புணருதலுக்காக வடிவமைக்கப்பட்ட
ஓர் உயிரை நான் தேடுவது மட்டும் எனக்கு நினைவு இருப்பது

எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.
எனக்கு ஒரு துணை தேவைப்படுகிறது என்பதே
இதற்கு காரணமாகவும் அமைவதாகத் தெரிகிறது.

எந்த துணையை நான் பற்றிக்கொள்ளலாம் என்றுகூட
நான் முடிவு எடுத்துவிட்டேன் .
அது ஒரு பெண்ணாக இருக்க வேண்டுமென்பதே
எனது இறுதி முடிவாகவும் அமைந்துவிட வேண்டும் என்பதில்
நான் திரிந்து விடாமல் இப்போதும் இருக்கிறேன்.

என்னால் புணர்ந்து வலிமையை இழந்து விட்ட,
எனது அறையில் ஒளிந்து கொண்ட புத்தகங்களை
நான் ஒரு அழகான சவப்பெட்டியில் பூட்டி,
அதற்கு வர்ணம் பூசி யார் கண்ணிலும் படாதபடி
மண்ணில் புதைத்து வைக்க நினைக்கும் போது
எனக்கு நம்பிக்கை குன்ற ஆரம்பித்து விடுகிறது.
அதனால் நான் எனக்குள்ளாகவே புதைத்து விடலாமென்று
என் மனதை ஆயத்தப்படுத்தும் முயற்சியானதில்
வெற்றி கிட்டும் என்பது மட்டும் தெரிந்து இருந்தது.

இப்போது நிம்மதியின் பெரு மூச்சில்
நான் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் பொழுது,
அன்பைக் குறித்துப் பேச என் மனம் பயணத்தைத் தொடங்குகிறது.
அப்போது, எனக்கு ஒரு சகோதரி என் முன் தென்பட்டு விடுகிறாள்
அவள் அன்பின் முழு பரிமாணத்தை என்னுள் செலுத்திக் கொண்டிருக்கிறாள்
அவள் பழகும் விதமும் பேசும் அழகும் எனக்கு பிடித்து விடுகிறது.
என்னை அறியாமலேயே அவளுடன் இன்னும் பாடம் கேட்கின்றேன்.

நான் அவளுடன் பாடம் கேட்பதைப் போலவே
என்னுள் புதைக்கப்பட்ட புத்தகங்களும்
பாடத்தை கற்றுக் கொண்டிருக்கின்றன என்பது
எனக்குத் தெரியாமல் போய்விட்டது.
ஒரு நாள் இரவில் நான் அந்த சகோதரியிடம் பாடம் கேட்டுவிட்டு
விட்டத்தைப்பார்த்து மல்லார்ந்து படுத்து உறங்கி கொண்டிருக்கின்றேன்.
சில நொடிகளில் ஒரு கனவு என்னை தட்டி எழுப்பி விட்டது
அந்த கனவு அந்த சகோதரியைப் பற்றியதாக இருந்தது
அவள் மரண வாசலை அடைந்து விட்டதாக எனக்கு நினைப்பை ஊட்டுகிறது.
மறுநாள் விடிவில் அந்தச் சகோதரியைக் காணவில்லை
என்ற செய்தி பத்திரிக்கை ஊடகங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.
இது கொலையாக இருக்கலாம் அல்லது கற்பழிப்பாகவும் இருக்கலாமென்று.

நான் இப்போது யோசனையில் ஆழ்ந்து கொண்டிருக்கிறேன்